**MCOP NO.83/2019**

**Date 15.07.2025**

**ம.சா.1 பாப்பாத்தி**

**3 ன் எதிர்மனுதார் குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. விபத்தில் இறந்து போன நபர் எனது கணவர் தான். நான் சம்பவ விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. மேற்படி எனது கணவருக்கு 2 மனைவிகள், நான் அதில் 1 வது மனைவி ஆவேன். நான் தான் விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனம் TN 72 U 3202 என்ற வாகனத்தினை விபத்து சமயம் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். விபத்து சமயம் எனது கணவர் தலைக்கவசம் அணிந்ததாக முதல் விசாரணை, மனுவிலும் புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம், RC புக் குறித்து எனது மனுவிலும் முதல் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவ விபத்தானது சிந்தாமணிக்கு வடக்கே அந்தோணிசாமி பெட்ரோல் பல்க்கு மேல்பக்கம் டீக்கடையில் டீக்குடித்துவிட்டு சாலை விதிகளை மதிக்காமல் தன் கவனக்குறைவாலும் வந்ததால் அவர் தான் விபத்திற்கு காரணம் என்றாலும் லாரி ஓட்டுநர் விபத்திற்கு காரணமில்லை என்றாலும் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் தென்காசி – மதுரை ரோட்டில் ரோட்டிற்கு கீழ்புறம் தான் விபத்து நடந்ததாக உள்ளது என்றாலும், சாலை விதிகளை மதிக்காமல் எனது கணவர் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எனது கணவரின் வயது, வருமானம், தொழிலை நிருபிக்ககூடிய அளவில் எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டிவிகிதம் அதிகப்படியானது என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. மனுப்படி தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் எந்தவித இழப்பீடு தொகையும் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. மனு அனுமதித்தால் அதில்பகுதி தொகையை கழிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**